செ.வெ.எண்:53 நாள்:23.02.2019

**கரூர் மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் செயல்படுத்தப்படவுள்ள சிறப்பு நிதியுதவி திட்டத்திற்கான கணக்கெடுப்பு பணிக்கு வரும் அலுவலர்கள் கேட்கும் விபரங்களை பயனாளிகள் வழங்கி ஒத்துழைக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் வேண்டுகோள்**

கரூர் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட ஊரக, நகர்புற மற்றும் பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள விவசாய தொழிலாளர்கள் மற்றும் இதர மிகவும் ஏழ்மை நிலையிலுள்ளவர்களுக்கு ஒரு முறை மட்டும் வழங்கப்படும் சிறப்பு நிதியுதவி திட்டத்திற்கான கணக்கெடுப்பு பணி துவங்கி நடைபெற்றுவருகிறது.

இதற்காக கணக்கெடுக்கும் அலுவலர்கள் ஒவ்வொரு வீடாக சென்று அதற்கான படிவத்தில் கணக்கெடுக்கும் பணியினை துவங்கியுள்ளார்கள். எனவே, கணக்கெடுப்பு பணிக்காக வரும் அலுவலர்களுக்கு கணக்கெடுப்பு படிவத்தினை பூர்த்தி செய்திட ஏதுவாக பயனாளிகள், நல வாரியத்தில் உறுப்பினராக இருந்தால் அதற்கான அடையாள அட்டையினையும், தற்சமயம் வருமானவரி செலுத்துபவராக இருந்தால் பான்அட்டையையும் மற்றும் ஆதார் கார்டு எண், வங்கிக்கணக்கு எண் போன்ற விபரங்களை வழங்க வேண்டும்.

தங்கள் வீடு தேடி வரும் கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி கணக்கெடுப்பு படிவத்தினை பூர்த்தி செய்திட உரிய தகவல்களை வழங்கி உதவவேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.